Regd. No. M. 4593. "KUDI ARASU" 12பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு.

[illegible] 18 ஈரோடு, 21-4-1945 சித்திரை-மீ 9உ மலர் 28

## தர்மம் அல்லது பிச்சை

ஈ. வெ. ரா.

தர்மம் அதாவது ஏழைகளுக்கு பிச்சை இடுதல் முதல் மற்றவர்களுக்கு பலவித உதவிகள் செய்வது என்பதுவரை அனேக விஷயங்கள் தர்மத்தின்கீழ் சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்தமாதிரி தர்மத்தைப்பற்றி எல்லா மதங்களுமே முறையிடுகின்றன.

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் முதலிய மதங்களில் இந்த தர்மத்தை—பிச்சை கொடுத்தலை மிக நிர்ப்பந்தமாக கட்டாயப்படுத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படி எனில் தர்மம் கொடுக்காதவன் பாவி என்றும் அவன் நரகத்துக்குப் போவான் என்றும், கடவுள் அவனை தண்டிப்பார் என்றும் இப்படியெல்லாம் பயமுறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது. இவை கடவுள் வாக்கெனவும் கூறப்பட்டிருக்கிறது.

இந்து மதம் என்பதில் தர்மத்தை 32 விதமாகக் கற்பித்து 32 தர்மங்களையும் ஒருவன் செய்யவேண்டும் என்றும், அந்தப்படி செய்தால் அவனுக்கு இன்னஇன்னமாதிரி புண்ணியம் கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது, அறம் 32. ஒரு மனிதன் சரித்திரம், படிப்பவர்களுக்குச் சாப்பாடு, பக்தர்களுக்கு உணவு, பசுவுக்கு வாயுறை, கைதிகளுக்கு சாப்பாடு, இரப்பவர்களுக்கு பிச்சை, தின்பண்டம், அநாதிகளைக் காத்தல், பிள்ளைப் பேறுக்கு மருத்துவம் செய்தல், அனாதிப் பிள்ளைகளை வளர்த்தல், பிள்ளைகளுக்கு பால் வார்த்தல், அநாதிப் பிணம் சுடுதல், ஏழைகளுக்கு ஆடை கொடுத்தல், வழிப்போக்கர்களுக்கு சுண்ணாம்பு கொடுத்தல், வைத்தியம் செய்தல், வண்ணான் உதவல், நாவிதன் உதவல், கண்ணாடி காட்டுதல், காதோலை கொடுத்தல், கண்ணுக்கு மருந்து செய்தல், தலை முழுக்காட்ட எண்ணெய் தருதல், பெண்போகம் வேண்டுவோருக்கு போகப்பெண் உதவுதல், கஷ்டத்தில் சிக்குண்டவர்களுக்கு உதவிசெய்து விடுவித்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், மடம் கட்டுதல், ரோட்டுப்போடுதல், சாலைமரம் வைத்தல், மாடு எருமை ஆகியவை தங்கள் தினவுகளை தீர்த்துக்கொள்ள சொறிகல் நடுதல், மிருகங்களைக் காத்தல், கக்கூசு கட்டல், விலைகொடுத்து உயிர் மீட்குதல், பெண் தானம் செய்தல்.

ஆகிய 32-தர்மங்கள் செய்யவேண்டியது ஒவ்வொரு மனிதனின் கடமை என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அதுபோலவே இஸ்லாம் மதம் என்பதிலும் அன்னியனுக்கு பிச்சை கொடுத்தாகவேண்டும் என்றும், அது ஒருவனுடைய வருஷ வரும்படியில் அவனது செலவுபோக மீதி உள்ளதில் 40-ல் ஒரு பாகம் வருஷத்தோறும் பிச்சையாக பணம், சாப்பாடு, துணி முதலியவைகளாய் கொடுக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப்படி செய்யாவிட்டால் மதத் துரோகம் என்றும் இந்தப்படி செய்யாதவன் இஸ்லாம் ஆகமாட்டான் என்றும் கூட கூறப்படுகிறது.

அதுபோலவே கிறிஸ்தவ மதத்திலும் தர்மம் கொடுக்கவேண்டியது மிக முக்கியமானதென்றும், தர்மம் செய்யாதவனுக்கு மோட்சமில்லை என்றும், உதாரணமாக ஒரு ஊசியின் காதோட்டை வழியாக ஒரு ஒட்டகம் நுழைந்தாலும் நுழையுமே ஒழிய பிச்சை கொடுக்காத பணக்காரன் ஒரு காலமும் மோட்சத்துக்குப் போகமாட்டான் என்றும் சொல்லப்படுகிறது.

இந்தப்படிக்கு தர்மங்கள் செய்ய வேண்டிய அவசியங்களை வற்புறுத்தி அந்த வற்புறுத்தல்களைப் பகவான் சொன்னான், ஆண்டவன் சொன்னான் என்று வேதங்கள் என்பவைகளிலும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த தர்மங்கள் எல்லாம் இருக்கிறவர்கள் அதாவது செல்வவான்கள், இல்லாதவர்களுக்கு—ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் இதன் தாத்பரியமாகும்.

செல்வவான்களுக்கு செல்வம் கடவுளால் கொடுக்கப்பட்டதாகும். ஆகையால் கடவுள் கொடுத்ததை கடவுளின் சிருஷ்டியாகிய—கடவுளின் பிள்ளைகளாகிய ஏழை மக்களுக்குக் கொடுக்க வேண்டியது அவசியமாகும் என்பதே அந்ததாத்பரியத்தின் உள்கருத்தாகும். செல்வவான்களுக்கு கடவுள் செல்வங்களைக் கொடுத்தார் என்றால் செல்வமில்லாத ஏழை தரித்திரவான்களுக்கு செல்வமில்லாமல் செய்தது கடவுள் தான் என்பதை எந்த மதவாதியும், ஆஸ்திகனும் மறுக்கமாட்டான் என்றும், மறுக்க முடியாது என்றும் சொல்லுவேன்.

செல்வம் என்பது உலகத்தின் பொது சொத்து. அதை யார் உண்டாக்கியிருந்தாலும் உலகத்தில் உள்ளவரை எந்த ஜீவனுக்கும் அது பொது சொத்தாகும். ஆனால் அந்தப் பொது சொத்தானது பலாத்காரத்தாலும், சூழ்ச்சியாலும், ஆட்சியாலும், கடவுள் பேராலும் ஒருவனுக்கு அதிகமாய்ப்போய்ச் சேரவும், மற்றொருவனுக்கு சிறிதுகூட இல்லாமல் தரித்திரம் பசி முதலியவை அனுபவிக்கவும் ஆன தன்மை உண்டாக்கப்படுகிறதே ஒழிய மற்ற எந்தக் காரணத்தாலும் எவனுக்கும் இல்லாமல் போக நியாயமே இல்லை.

ஆனபோதிலும் கடவுளே ஒருவனை செல்வவானாக ஆக்கினார் என்றும், கடவுளே ஒருவனை ஏழையாக ஆக்கினார் என்றும், வைத்துக்கொண்டாலும் தர்மம்—பிச்சை கொடுக்கிற அதிகாரத்தை மாத்திரம் ஏன் பணக்காரனுக்குக் கொடுத்து அவனுக்கு இஷ்டமிருந்தால் பிரத்தியானுக்கு பிச்சை போட்டு மோட்சத்துக்குப் போகும்படியும் அவனுக்கு இஷ்டமில்லையானால் பிச்சை கொடுக்காமல் இருந்து நரகத்துக்குப் போகும்படியும் எதற்காகக் கற்பிக்க வேண்டும் என்பது நமக்குப் புலப்படவில்லை. அன்றியும் ஏதோ இரண்டொரு பணக்காரன் பிச்சை கொடுத்து தர்மம் செய்து மோட்சத்துக்குப் போவதற்காகவும் பலர் பிச்சை கொடுக்காமல் இருந்து நரகத்திற்குப் போவதற்காகவும் எத்தனையோ கோடிக்கணக்கான பிச்சைக்காரர்களை ஏன் சிருஷ்டித்தார்

என்பதும் நமக்கு விளங்கவில்லை. செல்வம் கடவுளால் உண்டாக்கப்பட்டதானால் ஏழையும் பணக்காரனும் கடவுளால் தானே உண்டாயிருக்க வேண்டும். இந்தப்படி ஒரு கடவுள் மூன்றையும் படைத்து ஏழைக்கும் பணக்காரனுக்கும் வாங்கும் கொடுக்கும் உத்தியோகம் கொடுத்து இதற்கு கணக்கு எழுதி வைத்து அவனவனுக்குத் தகுந்த மோட்ச நரகத்துக்கு அனுப்பும் வேலையில் கடவுள் ஈடுபட்டிருக்கிறார் என்றால் கடவுள் பக்தர்கள் கடவுளை பரமமுட்டாளாகவும் பரிசுத்த மடையனாகவும் சிருஷ்டிக்கிறார்களா அல்லது கடவுளைப் பரம கருணாநிதியாகவும் பாரபட்சமற்ற தன்மையாகவும் சிருஷ்டிக்கிறார்களா என்று கேட்கின்றேன்.

ஏழையை சிருஷ்டிப்பானேன்? பணக்காரனை சிருஷ்டிப்பானேன்? ஏழையைப் பணக்காரனிடம் போய் கெஞ்சும்படி செய்வானேன்? பணக்காரன தனக்கு இஷ்டமிருந்தால் கொடுப்பதும் இஷ்டமில்லாவிட்டால் கொடுக்காமல் ஆளைவிட்டு கழுத்தைப் பிடித்து தள்ளச் சொல்லுவதும் ஏன்?, என்பவைகளை யோசித்துப் பார்த்தால் முதலில் இந்தத் தத்துவம் உண்மையாய் இருக்குமா என்பதே பெரிய சந்தேகமாய் இருப்பதோடு பரிசுத்த ஆஸ்திகத் தன்மையுடன் கடவுளை சிருஷ்டித்துப் பிரசாரம் செய்கின்ற மக்கள் எவ்வளவு முட்டாள்களாய் இருக்கிறார்கள் என்பதும் வெள்ளிடைமலையாகும்.

கடவுள் பார்த்து ஒரு உத்திரவில் அல்லது ஒரு சங்கல்பத்தில் எல்லாப் பொருளும் எல்லா மக்களுக்கும் பொதுவாய் இருக்கத்தக்கது என்று செய்துவிட முடியாதா என்று கேட்பதோடு எல்லா ஜீவன்களையும் தானே சிருஷ்டித்து, தானே நடத்துகிறவனாய் இருக்கிறபடியால் ஒன்றை ஒன்று துன்புறுத்தவோ ஒன்றை ஒன்று கொன்று தின்னவோ கூடாது என்று நிர்ணயித்து விட முடியாதா என்று கேட்கின்றேன். உண்மையாகவே ஒரு யோக்கியமான கடவுள் இருந்தால் இதைச் செய்திருக்க மாட்டாரா என்றும் கேட்கின்றேன்.

இந்தப்படி செய்வது முடியாத காரியம் என்று யாராவது சொல்லுவார்களானால் ரஷ்யாவில் லெனின் என்ற ஒரு மனிதன் இந்தப்படி உத்திரவு போட்டு பணக்காரரும், பிச்சைக்காரரும் இல்லாமல் செய்துவிட்டாரே, இவர் கடவுளுக்கும் பெரியவரா? என்று கேட்கிறேன்.

ஆதலால் தர்மம்—பிறத்தியானுக்கு பிச்சை கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவுவது என்கின்ற முறைகள் எல்லாம் பணக்காரத்தன்மைக்கு அனுகூலமானதே தவிர—பணக்காரத் தன்மையை காப்பாற்ற ஏற்படுத்தப்பட்டதே தவிர, அவை ஒரு நாளும் ஏழைகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் அனுகூலமானதல்ல.

ஏனெனில் பிச்சை கொடுப்பது, மற்றவர்களுக்கு உதவிசெய்வது என்கின்ற காரியங்களால்தான் இல்லாத ஏழை மக்களை—தரித்திரவாசிகளான மக்களைப் பிரித்தான முடியும். ஏழைமக்கள் பிரிந்திருந்தால்தான் பணக்காரர்கள் வாழ முடியும். அன்றியும் பணக்காரமக்கள் மீது ஏழைமக்களுக்கு குரோதமும் வெறுப்பும் இல்லாமல் இருக்கவேண்டும் என்கின்ற காரியத்திற்காகவே தர்மம் என்பதும், ஐக்காத் என்பதும், பிச்சை என்பதும் கற்பிக்கப்பட்டதே ஒழிய பிச்சைக்காரர்களுக்கு உதவி செய்வதற்கோ அவர்களைக் காப்பாற்றுவதற்கோ ஏற்பட்டதல்ல.

பிச்சைக்காரர் இருப்பதும், அவர்கள் பிச்சை எடுப்பதும் ஜனசமூகத்துக்கு ஒரு பெரும் தொல்லையும் இழிவுமாகும் என்பதோடு ஒரு கடவுள் இருந்தால் அக்கடவுளுக்கு மிகுந்த அவமானமும் அயோக்கியத்தனமான காரியமுமாகும்.

இந்தக்கருத்தை வைத்தே திருவள்ளுவரும் "பிச்சை எடுத்து வாழவேண்டிய மனிதனை கடவுள் சிருஷ்டித்து இருப்பானேயானால் அக்கடவுள் இல்லையென்றுதான் அர்த்தம். அவன் இருந்தாலும் ஒழியவேண்டியதே அவசியம்" என்று சொல்லியிருக்கிறார்.

திருவள்ளுவர் நூலில் முன்னுக்குப் பின் முரண்கள் பல இருந்தாலும், அவர் ஒரு தனி உடைமைக்காரரேயானாலும், இந்த ஒரு விஷயத்தில் தைரியமாய்ச் சொல்லியிருக்கிறார்;

ஆனாலும் இதற்கு முரணாக மற்றொரு இடத்திலும் சொல்லி இருக்கிறார். அதாவது "தர்மம் செய்தவனையும் பாவியையும் பார்க்கவேண்டுமானால் பல்லக்கில் போகிறவனையும் பல்லக்கு சுமப்பவனையும் பார்" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இதிலிருந்து தர்மம் செய்ததினாலேயே பல்லக்கில் போகும்படியான செல்வனாகப் பிறந்தான் என்றும், தர்மம் செய்யாததினாலேயே பல்லக்குத் தூக்கும் தரித்திரனாகப் பிறந்தானென்றும் சொல்லுகிறார்.

அப்படியானால் ஏழை பணக்காரத் தன்மையைத் திருவள்ளுவர் ஆதரிக்கிறார் என்பதாக ஒருபுறத்தில் விளங்குகிறது. இந்த முரணும் மயக்கமும் ஏற்பட்டதற்குக் காரணம் இவருக்குக் கடவுள் தன்மையில் ஆத்மார்த்தத்தில் இருந்த நம்பிக்கையேயாகும். கடவுள் தன்மை அதாவது "மனிதத்தன்மைக்கு மீறின ஒரு சக்தி இருக்கிறது. அதற்கும் உலக நடவடிக்கைகளுக்கும் சம்மந்தம் உண்டு" என்று எவன் கருதினானாலும் அப்படிப்பட்டவன் முன்னுக்குப்பின் முரணாகவும், தனிஉடைமைக்காரனாகவும், உயர்வு தாழ்வை ஆதரிக்கிறவனாகவும் இருந்துதான் தீருவான்.

எது எப்படி இருந்தபோதிலும் உலகத்தில் மனித சமூகம் தொல்லை இல்லாமல் வாழவேண்டுமானால் பிச்சை கொடுப்பதும் பிச்சை எடுப்பதும் சட்டவிரோதமான காரியமாய்க் கருதப்படவேண்டும்; அப்படியானால்தான் மனிதன் சுயமரியாதையோடு வாழமுடியும். பிச்சைகொடுக்கும் வேலையை சர்க்காரே ஏற்றுக்கொண்டு அதற்கு பணம் வேண்டுமானால் பணக்காரரிடம் இருந்து பிச்சைவரி என்று ஒரு வரியை கிறிஸ்து சொன்ன கணக்குப்படியோ முகம்மதுநபி சொன்ன கணக்குப்படியோ சர்க்கார் வசூலித்து, அதற்கு ஒரு இலாகா வைத்து வினியோகிக்கவேண்டும். அந்தப் பிச்சையை சர்க்கார் தொழிற்சாலைகள்வைத்து அதன்மூலம் பிச்சைக்காரர்களிடம் வேலையை வாங்கிக்கொண்டு வினியோகிக்கவேண்டும். இந்தக்காரியத்துக்காக சர்க்கார் எந்த தொழிற்சாலை வைக்கிறார்களோ அந்த மாதிரி தொழிற்சாலையை மற்றவர்கள் வைக்காமல் தடுத்துவிடவேண்டும்.

இப்படிச் செய்தால் பணக்காரர்கள் ஏற்பட்டு நாசமாய்ப் போனாலும் பிச்சைக்காரர்கள் தொல்லையாவது இல்லாமல் போய்விடும். பணக்காரத்தன்மை ஆட்சியில்லாத தேசம் எதிலும் இந்தக் காரியம் சுலபமாய் நடத்தலாம்.

ஆகவே தர்மம் செய்வது அக்கிரமம் என்றும், ஜன சமூகத்துக்குத் தொல்லை என்றும், பணக்காரர்களின் அயோக்கியத்தனங்களை மறைக்க ஒரு சூழ்ச்சி என்றும் சொல்லுகிறேன்.

## ஒத்திவைப்பு

23-4-45ந்தேதி கொண்டாடுவதாக இருந்த புதுக்கோட்டை இக்பால் இளைஞர் சங்கத்தின் 5ஆம் ஆண்டுவிழா 12-5-45ந்தேதி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.


## பகுத்தறிவு வால்யூம்

### விற்பனைக்குத் தயார்

1937ஆம் வருட பகுத்தறிவு பைண்டு வால்யூம் விற்பனைக்குத் தயார் ஆகிவிட்டது. ('37ஜூன் முதல் '38ஏப்ரல் வரையுள்ள புத்தகங்களில் '37 மே மாதம் புத்தகம் நீக்கி 11-புத்தகங்கள்கொண்ட வால்யூம்) விலை ரூ. 1-12-0. தபால் செலவு வேறு. (புக்போஸ்டில் அனுப்ப 6அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 9-அணா)

'38 மே முதல் '39 ஜனவரி முடிய 9-மாதங்கள் கொண்ட பைண்டு வால்யூமுக்கு விலை ரூ. 1-8-0. தபால் செலவு தனி. (புக்போஸ்டில் அனுப்ப 5-அணா. ரிஜிஸ்தர் புக்போஸ்டில் அனுப்ப 8-அணா)

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

# உண்மை நூல்கள் எது?

(புவனகிரி, சிங்காரவேலடிகள்)

வேதமா வேதாந்தமா உபநிஷத்துகளா, பதினெண் புராணங்களா, ஆகமங்களா, மனுஸ்மிருதிகளா, இதிகாசங்களா, சங்க இலக்கியங்களா, இலக்கணங்களா, மற்றும் அறநூல்களா, மந்திர நூல்களா, தந்திர நூல்களா, வாத நூல்களா, வைத்திய நூல்களா, கருமத்தை இயற்றச்சொல்லும் நூல்களா, பக்தியை வளரச்செய்யும் நூல்களா, ஞானத்தை போதிக்கும் நூல்களா மற்றும் பிறநூல்களா? இதில் எதை குறிப்பிடுகின்றீர்கள். திராவிடநாட்டில் தேனென இனிக்கும் தமிழ்மொழிக்கு 5000-ஆண்டுகளுக்கு முன்னேயுள்ள முதற் சங்க நூல்களே திராவிட மொழிக்கு முதற்காரணம் என்பர் சிலர். ஒருவகையாக அதனை ஏற்றுக்கொள்வதாயினும் இடைச் சங்க நூல்களிலும் கடைச் சங்க நூல்களிலும் இடைச்செருகல் இருப்பதுபோன்று முதற் சங்க நூற்களிலும் இடைச் செருகல் இருப்பதைப் புலவர்கள் நன்கு ஆராய்ச்சி செய்து எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். ஆகையால்முதற் சங்க நூல்களிடத்தும் ஆரியக் கலப்புற்ற இடைச்செருகல் இருப்பதால் உண்மை திராவிடர்களுக்கு அவை உண்மை நூல்கள் ஆகமாட்டாவென்பது நிச்சயம். திராவிட நூல்களுக்கு ஒவ்வொரு காலத்தில் பெரும் விபத்துக்களும் தீங்குகளும் உண்டாயிருப்பதாக அப்போதைக்கப்போது எழுந்த சரித்திரங்களினால் நன்கு புலப்படுகிறது. திராவிடநாட்டில் ஆரியன் குடிபுகுந்து ஆரிய வொழுக்கங்களையும் பழக்கங்களையும் மறைத்துக்கொண்டு திராவிடநாட்டுப் பண்டைய பண்புகளை நன்கு உணர்ந்துகொண்டு திராவிடநாட்டு பேரரசர்களையும் சிற்றரசர்களையும் தங்கள் காதல் வலையை வீசி அடிமைப்படுத்திகொண்டனர். அரசர்களை அடிமைப்படுத்திக்கொண்டதும் தங்கள் இஷ்டம்போல் கலை நாகரீகம் ஒழுக்கம் தொழில் முதலிய யாவற்றையும் தங்களுக்குச் சாதகமாக நூல் வழிகாண்பிக்க திருத்தி அமைத்துக் கொண்டனர் என்பதற்கு சான்றுகள் பல மலிந்து கிடக்கின்றன. திராவிடகலைக்குப் பேராபத்து வந்த காலத்தில் பௌத்தமும் சமணமும் நீண்டகாலம் நம் இனிய மொழிக்கு உதவி புரிந்துவந்ததாக ஆராய்ச்சி நூல்களினால் தெற்றன விளங்குகின்றன. ஒரு நாட்டைவிட்டு மற்றொரு நாட்டுக்கு வந்து குடிபுகுந்த ஆரிய மக்கள் எவ்வளவோ சமத்தர்கள், சூழ்ச்சிக்காரர்கள், மோசக்காரர்கள், வஞ்சக மனதுடைய துரோகிகள், வலைவீசி மீன்பிடிப்பவர்போன்று காதல் வீசி நம்நாட்டுத் தேசத் தலைவர்களைப் பிடித்துக்கொண்டார்கள் என்பதற்கு சந்தேகமில்லை. ஆகையால் அவர்கள் இஷ்டம்போல் நம் பழங்குடி மக்களாகிய திராவிடர்களுக்கு ஆதாரமான நூல்கள் யாவற்றையும் திருத்தியமைத்துக் கொண்டனர். அரசியல் துறையில் முதன்மை பெற்றதற்கு இதுவே முதற்காரணமாகும். அரசன் எவ்வழி, அவ்வழி குடிகளும் என்ற வாக்கியத்திற்கு சான்றானார்கள். சமூகத் துறையில் அவர்கள் காட்டிய வழிநிற்க நேர்ந்ததற்கு இதுவே காரணமாகும். இப்போது மேல்நாட்டு கலை நம் நாட்டில் உலவ ஆரம்பித்த பின்னர் உற்று நோக்கினர் திராவிட மக்கள். பகுத்தறிவிற்கும், ஆராய்ச்சிக்கும், சரித்திரத்துக்கும் பொருத்தமில்லாத பழக்கங்களையும் நூல்களையும் அடியோடு தள்ளிவிடவேண்டியது அவசியத்திலும் அவசியம் என்று ஏற்பட்டதால் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற முறையை கையாள ஆரம்பித்தனர். திராவிடர்களை பாஷையினால் ஏமாற்றி வயிறு பிழைத்த கூட்டத்தார்களும் அவர்கள் பாதம் பணிந்து வாழும் கூட்டத்தார்களும் நம் மீதும் நம் ஒப்பற்ற தலைவர் பெரியார் மீதும் பாணம் தொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரிய பாணங்கள் எத்தனை விட்டாலும் நம் அடிபணியுமே ஒழிய நம்மை ஒன்றும் செய்துவிடாது. நம் இயக்க தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., அவர்கள் எத்தனை ஆரிய பாணத்திற்கும் அவர் வழி அடிபணிந்து நிற்கா, —ஒவ்வொரு பாணத்திற்கும் அஞ்சாது எதிர்பாணம் தொடுத்துக்கொண்டிருக்கும் சக்தியும், ஆற்றலும், அறிவும் ஆராய்ச்சியும் மிகுந்தவர்; தயாராக இருந்துகொண்டே இருக்கிறார். பழைய நூல்கள் அனைத்தும் காலத்துக்கேற்றவாறு கற்பனையை தன்னுள்ளடக்கிக் கொண்டு கூறியிருப்பதை அறிஞர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அனுபவத்தில் கொண்டுவரவோ தங்கள் மக்களுக்கு எடுத்துச் சொல்லவோ பயமும், நாணமும், வெட்கமும் படுவதென்றால் அறிஞர்கள் என்று அன்னார்களை எப்படி கூறமுடியும்? அறிஞர்கள் நாட்டுக்கு நலம் செய்யவேண்டாமா? உருவ வழிபாட்டை எந்தப் புலவனும் எந்த நூல்களும் ஒப்புக்கொள்ளவில்லை. அதை எடுத்துக் கூற வயிற்றுப் பிழைப்பு போய் விடுமே என்ற பயம். செல்வம் மிகுதியுடைய புலவனுக்குப் பயம் வருவதற்கு ஏதுவில்லை. உலகத்தை ஏமாற்றிப் பிழைக்கும் கூட்டமா நம் திராவிட மக்கள்? உண்மை நாடும் மக்கள் அல்லவா நம்நாட்டு திராவிடர்கள். உண்மையான நாட்டில் வசிந்திருப்பவரன்றோ. அவ்வாறிருக்க பயம் ஏன்? ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருகாலத்தில் சீர்திருத்தக்காரர்கள் தோன்றி அடியோடு முன்னுள்ள போக்கை முற்றிலும் அகற்றி மக்கள் வாழ்க்கைக்கு வேண்டுவனசெய்து உயிர் துறந்து இருப்பதாக சரித்திரவுலகம் உங்களுக்கு எடுத்து போதிக்கவில்லையா, நம்நாட்டில் இதுகால பரியந்தமும் போற்றி புகழ்ந்து வந்த நூல்களனைத்தும் புறக்கணிக்கப்படுவதற்குக் காரணம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் உலக அனுபவத்திற்கும் பொருத்தமில்லாமையேயாகும். வாழ்க்கைமேன்மையுறப் பாடுபடுங்கள், வாழ்க்கை மேன்மையுற்றால் இன்பம் வந்து எய்யும்; இன்பம் வந்து எய்தியக்கால் ஆங்கு யாவும் பெறலாம். தன் மானத்தைக் காத்துக்கொடுக்கும் நூலே நூலாகும். 'மயிர் நீப்பின் வாழா கவரிமான் அன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்' பொய்யாமொழிப் புலவர் வாக்கையுண்ணுங்கள். நம் மானத்தையுமிழந்து, பொருளையுமிழந்து, புகழையுமிழந்து வாழ்கின்ற வாழ்க்கையைப் போதிக்கும் நூல்கள் அனைத்தும் உண்மை நூல்கள் அல்ல.

# நமது தலைவர் பேட்ஜ்

நமது தலைவர் பெரியாரின் உருவம் அமைந்த பேட்ஜ் அழகிய கலரில் வெளிவந்துள்ளது. ஒன்றின் விலை 0—1—0. தேவைக்கு எழுதுக. ஆர்டர் கடிதங்களை மட்டும் முக்கியமாக கவனிக்கப்படும்.

திராவிடன் பதிப்பகம்,
133–லாங்கு பசார், வேலூர். (வ. ஆ.)


## வடச்செங்கற்பட்டு ஜில்லா ஆதிதிராவிட முதல் மாநாடு

### தோழர் சி. தங்கராஜ் தலைமையுரை

சமீபத்தில் சென்னையில் நடந்த வடச்செங்கற்பட்டு ஜில்லா ஆதிதிராவிட முதல் மாநாட்டில் தலைமைவகித்த தோழர் சி. தங்கராஜ் அவர்கள் ஆற்றிய சொற்பெருக்கின் சுருக்கம்:—

"உழைப்பாளிகள் என்றால் நம்இந்திய நாட்டை பொறுத்தவரையில் 100க்கு 10 வீதமுள்ள நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளில் வேலைச்செய்யும் தொழிலாளிகளைவிட 100க்கு 90 விகிதமுள்ள கிராமங்களின் வயல்களில் பாடுபடும் பாட்டாளிமக்களையே குறிக்கும். இந்தியாவில் 7-லட்சம் கிராமங்களிருக்கின்றன. அக்கிராமங்களில் பாடுபடுபவர்கள் பெரும்பாலும் நமது மக்களேயாகும். அவர்களின் நிலை என்ன?

ஒரு பக்கம் முதலாளி ஆதிக்கத்தாலும், மற்றொருபக்கம் ஜாதிக்கொடுமையினாலும் துன்பப்படுத்தப்படுகிறார்கள். இந்நிலை மாற்றப்பட்டாலொழிய நம் சமூகம் பொருளாதாரத் துறையிலோ, கல்வித்துறையிலோ முன்னேற்றமடைய முடியாதென்பது திண்ணம்.

இதற்கு முதல் நாம் செய்யவேண்டிய வேலையென்ன? அகில இந்தியாவின் பல பாகங்களிலும் பல பெயரினால் அழைக்கப்படும் நமது சமூகத்தார் அனைவரும் ஒரே ஸ்தாபனத்தின் கீழ் ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும். எப்படி இந்தியா பூராவிலுமுள்ள முஸ்லிம்களுக்கு "அகில இந்திய முஸ்லிம் லீக்" என்ற ஒரு ஸ்தாபனமானது இந்திய முஸ்லிம்கள் அனைவரையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறதோ, அதைப்போல் 86 உட்பிரிவுகளைக்கொண்ட நாம் 'ஷெட்யூல்ட்கியாஸ்ட்ஸ்' என்று அரசாங்கத்தாரால் அழைக்கப்படுகிறோம்.

ஆகவே, இதையே ஆதாரமாகக் கொண்டு "அகில இந்திய ஷெட்யூல்ட் கியாஸ்ட்ஸ் பெடரேஷன்" என்ற மத்திய ஸ்தாபனம் ஒன்று இந்தியாவின் தலைநகரான டெல்லியில் நிறுவப்பட்டிருக்கிறது.

ஆகையால் நாமும் அம்மத்திய ஸ்தாபனத்தைப் பின்பற்றி நமது சென்னை ராஜதானியின் பல ஜில்லாக்கள், தாலுக்காக்கள், கிராமங்கள் முதலிய பல விடங்களிலும், மேற்கண்ட பெயருடன் சங்கங்களை நிறுவி அவைகளை மாகாண சங்க மூலமாக அகில இந்திய ஸ்தாபனத்துடன் இணைக்கவேண்டும். அச்சங்கங்களில் நமது வகுப்பு ஆண், பெண் ஆகிய பலரும் அங்கம் வகிக்கவேண்டும். நமது சபைகளின் வளர்ச்சிக்காக வருட சந்தா நபர் ஒன்றுக்கு அணா (4) நான்கு எனக் குறித்திருக்கிறது.

இம்மாதிரியான மாநாடுகளை ஆங்காங்கு கூட்டி நமது தீர்மானங்களை நமது அகில இந்திய ஸ்தாபனத்தின் மூலம் அரசாங்கத்திற்கு அனுப்பி அவைகளை அமுலுக்குக் கொண்டுவரும்படி வற்புறுத்தவேண்டும்.

நமது தலைவர்களில் சிலர் பலமுள்ள கட்சியில் சேர்ந்திருந்தால் நமது சமூகத்தாருக்கும் உதவி செய்யலாம், அவர்களும், பதவியும், பலனும் அடையலாம் என்று கருதி சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் சொந்தப் பொறுப்பிலே சேர்ந்து நன்மை அடையட்டும் அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் அந்தக் கட்சியாரின் ஒலிபெருக்கிக் கருவியாயிருந்துகொண்டு நமது சமூகத் தலைவர்களைத் தாக்கிப் பேசியும், எழுதியும் வருவதை அழுத்தமாகக் கண்டிக்கவேண்டும்.

நம்மினத்தவரில் பெரும்பாலானோர் விவசாயிகளாக இருந்து வருகின்றனர். இன்னும் சிலர் அடிமைத் தொழில்களிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர்.

"உழவுத்தொழில் உலகத்திற்கு உயிர்" என்றாலும் எப்போதும் விவசாயிகளாகவே நம்மவர்கள் இருக்க விரும்புவார்களானால் சலப்பையையும், கழனியையும் தவிர வேறு வகையில் முன்னேற முடியாது. உலகத்தின் முன்னேற்றமடைந்துள்ள நாடுகள் எந்தப்பாகத்தையெடுத்துக்கொண்ட போதிலும், எந்த சமூகத்தையெடுத்துக்கொண்ட போதிலும் அவைகள் கைத்தொழிலாலும், வியாபாரத்தினாலுமே சிறந்து விளங்குகின்றன என்பது நன்கு புலப்படும். ஆகவே நம்மவர்கள் நமது மக்களைப் பலவிதமான கைத் தொழில்களிலும், வியாபாரத் துறையிலும் பழக்க முக்கிய கவனம் செலுத்தவேண்டும். கூட்டுத் தொழிலும், கூட்டு வியாபாரமும் செய்ய முன்வரவேண்டும்.

கூடியவரை பலவகைப்பட்ட கைத் தொழில்களிலும், வியாபாரத் துறையிலும் நாம் முன்னுக்கு வர முயற்சி செய்தல் வேண்டும். நாவிதத்தொழில் முதற்கொண்டு நாட்டுக்கு வேண்டிய ஒவ்வொரு தொழிலிலும் பயிற்சி பெற்று தேர்ச்சியடையவேண்டும்.

"ஷெடியூல்டு வகுப்பினர்" தேசத் தொழில் ஒவ்வொன்றிலும் தேர்ச்சி பெற்றவர்கள் என்ற கௌரவத்தை நாம் அடையவேண்டும். எத்தொழிலையும் இழிவானதென்றோ, குறைவானதென்றோ எண்ணுவது தவறாகும். கூடிய வரையில் எல்லாவிதத் தொழில்களிலும் நாம் ஈடுபடுவது மிக்க அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

உண்மையில் கிராமங்களை சீர்திருத்த வேண்டுமானால் பெரியார் சொல்லும் முக்கிய காரியங்களைச் செய்யவேண்டும்; விவசாயம் உடலுழைப்பால் நடைபெறுவதை மாற்றி அதை ஒரு தொழில் முறையாக அதுவும் இயந்திரத்தொழில் முறையாக (இன்டஸ்ட்ரியல்) ஆக்கப்பட வேண்டும்; உழுவதும், விதைப்பதும், அறுப்பதும் இயந்திரத்தால் செய்யப்பட வேண்டும். அந்த அளவுக்கு பூமிகளை திருத்தி இணைக்கவேண்டும். அதற்குப் பயன்படாத பூமியை தனிப்படுத்தி அடிக்கடி பாடுபடவேண்டிய அவசியமில்லாத பயிர்செய்யவேண்டும்.

விளைபொருளால் ஆக்கப்படும் பண்டங்களை ஆங்காங்கே விவசாயிகள் கூட்டுறவு முறையில் ஆக்கப்பட்டு அந்தப் பயன் விவசாயிகளுக்கே கிடைக்க வேண்டும்.

கீழான தொழில், ஈனமான தொழில், கஷ்டமான தொழில், சரீர உழைப்பு அதிகமாகவும், பயன்மிக்கக் குறைவாகவும், வாழ்வில் இழிவாகவும் இருக்கும் படியான தொழில் முறைகளை நாட்டில் இல்லாமல் செய்யவேண்டும் அதுதான் நாட்டு முன்னேற்றமாகும்.

## திருச்சி ஜில்லா போர்டு இடைத்தேர்தல்

திருச்சி தாலுகா மணிகண்டம் பிர்க்காவில் காலியான ஜில்லா போர்டின் அங்கத்தினர் ஸ்தானத்திற்காக நடந்த இடைத்தேர்தலில் பிரபல மிராசுதாரும், கண்ட்ராக்டரும், ஜில்லா திராவிட கழக துணைத்தலைவருமான வ. அங்கமுத்து அம்பலகாரர் அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ரோஜா முத்தையா

# மாவட்டம் தோறும் மாணவத்தோழர்கள்

தஞ்சை:

கருந்தட்டாங்குடி தஞ்சைத் திராவிட வாலிபர் கழகத்தின் ஆதரவில் 10-4-45ந் தேதி மாலை 7 மணிக்கு தோழர் பி. ஆர். மீனாட்சிசுந்தரம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் நன்மாறன், க. மு. மவி, ஏ. பி. சனார்த்தனம், வி. வ. அரங்கசாமிப் புலவர் முதலியவர்கள் பேசினார்கள். அதுசமயம் உள்ளூர் சினிமாக்களுக்கு கட்டணம் உயர்த்திருப்பதைக் கண்டித்தும், உட்காரும் வசதிகள் சரிவரச் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டும், கரந்தையிலுள்ள வானொலி நிலையத்தில் போதிய வெளிச்சம் ஏற்படுத்த கேட்டுக்கொண்டும், 'விடுதலை', 'லிபரேட்டர்' பத்திரிகைகளின் கிருபாகளின் போக்கைக் கண்டித்தும், அவர்களுக்குப் பதிலாகப் பார்ப்பனரல்லாதார் ஒருவரை நியமிக்குமாறு கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

* *

11-4-45-ல் நாகையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

* *

திருவாரூரில் செல்வம் நிலைவு நாள் 12-4-45-ந் தேதி விஜயபுரம் எல்லையம்மன் சன்னதியில் தோழர் கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் கொண்டாடப் பட்டது. தோழர்கள் கரந்தைப் புலவர் அரங்கசாமி, புலவர் குழந்தையா, ஏ. பி. ஜனார்த்தனம், வி. ஐ. ரெங்கராசு முதலியவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

நன்னிலம் திராவிட மாணவர் கழகத்தின் முதலாவது ஆண்டுவிழா தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் 13-4-45-ந் தேதி மாலை 6 மணிக்கு சிறப்புற நடைபெற்றது. அவ்வமயம் தோழர்களான பி. சனார்த்தனம் பி. ஏ., இரா. இளம்வழுதி, அரங்கசாமிப் புலவர், புலவர் கல்லூரி மாணவர் கே. எஸ். மணி, எஸ். தவமணிஇராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். மற்றும் இவ்வூர் தாசில்தார் தோழர் எஸ். டி. வேதமூர்த்தி பி. ஏ. அவர்களும் இவ்வூர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் தோழர் எம். கோவிந்தசாமி பி. ஏ., எல். டி. அவர்களும் "திராவிட மாணவர்கள் கடமை" என்பது பற்றிப் பேசினார்கள். ஆண்டுவிழாவிற்குப் பிறகு தோழர் சவுரிராசன் அவர்கள் தலைமையில் அதே இடத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்களான ஏ. பி. சனார்த்தனம் பி. ஏ., இளம்வழுதி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தோழர் எஸ். தவமணி இராசன் அவர்களால் விவசாய வருமான வரித் திட்டத்தை ஆதரித்துத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு திருவாரூர் தென்னன் அவர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

* *

14-4-45-ல் குடந்தைத் தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் திருச்சேறை திராவிடர் கழகத்தில் "பன்னீர்செல்வம் நாள்" கொண்டாடப்பட்டது. மாணவத் தோழர்கள் இரா. இளம்வழுதி, எஸ். தவமணி இராசன், ஈ. வெ. கி. சம்பத், ஏ. பி. சனார்த்தனம் பி. ஏ., ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

விவசாய வரியை ஆதரித்துத் தீர்மானம் செய்யப்பட்டது.

* *

15-4-45-ல் குடவாசல் திராவிடர் கழக சார்பில் புலவர் வி. அரங்கசாமி அவர்கள் தலைமையில் தோழர்கள் எஸ். தவமணி இராசன், திருவாரூர் மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத், ஏ. பி. ஜனார்த்தனம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

கோவை:

ஷை மாணவத் தோழர்கள் 16-4-45-ல் ஈரோட்டில் நடந்த திராவிட மாணவர் கழக மாலைப் பொதுக் கூட்டத்தில் கலந்து சொற்பொழிவாற்றினார்கள்.

* *

தஞ்சை:

நீடாமங்கலம் சுயமரியாதைச் சங்க இலவச வாசகசாலையார், திராவிடர் கழக சார்பில் 17-4-45ந் தேதி நீடாமங்கலம் சீனிவாசபிள்ளை சத்திரத்திற்கு எதிரில் நீடாமங்கலம் ஜி. ஆறுமுகம் தலைமையில் அண்ணாமலைநகர் சர்வகலாசாலை மாணவர்கள் தோழர் மதியழகன், இளம்வழுதி, கரந்தை க. சு. மணி முதலியவர்கள் "பாரதிதாசன் பிறந்தநாள்" ஞாபகார்த்த பிரசங்கமாக "திராவிடநாட்டு பிரிவினையும் நாமும்" என்கிற தலைப்பில் சுமார் 2-மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். ஏராளமான மக்கள் கூடியிருந்தார்கள்.

## ஒத்திவைக்கப்பட்டது

சென்னையில், தளபதி சி. என். ஏ. நடிக்கும் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் நாடகம், எதிர்பாராத சில காரணங்களால் 29-4-45-ல் இருந்து ஒத்திவைக்கப்பட்டது. மே மாதம் இரண்டாவது வாரத்தில் கட்டாயம் நடைபெறும். தேதி விரைவில் அறிவிக்கப்படும். நாடக டிக்கட்டுகள் இதுவரை விற்றுவந்தது போன்று சென்னையின் பல பாகங்களிலும் விற்கப்படும். டிக்கட்டுகளை முன்னரடியே வாங்கிக்கொள்ள வேண்டுகிறோம். டிக்கட்டுகள் வாங்கியுள்ள தோழர்கள் அதே டிக்கட்டையே நாடகத்தன்று கொண்டுவரவும். டிக்கட்டில் மாற்றம் ஒன்றும் கிடையாது. நாடகத்தை ஒத்திவைக்க நேர்ந்தது பற்றி மன்னிக்க வேண்டுகிறோம். டிக்கட்டுக்கு முந்துங்கள்.

காரியதரிசி,
சுயமரியாதைச் சங்கம், சென்னை.

மாந்தலே: அதற்குப்பின் 100 மைல்
தெற்கில் சிலர் போர் நடத்துகிறார்கள்
ஆனால்,
அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச்
செல்லுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு
வசதிகள்
அதிகம் தேவைப்படுகின்றன.
ஆகவே
நமது வீரர்களைத் துரிதப்படுத்த
மே. த. கவர்னர்
யுத்த நிதியில்
துருப்புக்கள் வசதி நிதிக்குப்
பணம் கொடுத்து உதவுங்கள்

குடி அரசு

1945-ஞு ஏப்ரல்-மீ 21-உ

# இது சகஜம்!

இன்றைய சென்னை சர்க்கார் வெளியிட்டிருக்கும் விவசாய வரி மசோதாவை நாங்கள் ஆதரிக்கிறோம் என்பதை ஏற்கனவே விளக்கியிருக்கிறோம். இவ்வரி விதிப்பால் ஏழை மக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதைப் பொது மக்கள் மீண்டும் உணர வேண்டும். ஏனெனில் இவ்வரி விதிப்பால் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஒரு மூவாயிரம் பேர்கள் தான். அதுவும் அவர்களது டம்பாச்சாரி செலவுகளில் வேண்டுமானால் ஒரு சிறு துண்டு விழுந்தாலும் விழலாமேயல்லாது மற்றபடி பெரும் பாதகம் ஒன்றும் ஏற்படாது. ஆனால் இவ்வரியினால் ஏற்படப்போகும் பலனோ என்றால் அதிகம். பல லட்சக் கணக்கான மக்கள் பல வகைகளிலும் நன்மையடைவார்கள். தொழில், கல்வி, சுகாதாரம் முதலிய வசதிகளைப் பெறுவார்கள். ஆகவே, பொதுமக்கள், ஒருசிலரின் ஆடம்பரவாழ்க்கை பாதிக்கப்படுவது கஷ்டமா அல்லது பலரின் உண்மையான தேவை பூர்த்தியாவது கஷ்டமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஏனெனில், மாயவரத்தில் சமீபத்தில் நடைபெற்ற தஞ்சை ஜில்லா மிராசுதார் மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர், திறப்பாளர், தலைவர் ஆகிய யாவரும் விவசாய வருமானவரியைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். இது சகஜம். அவர் (மிராசுதார்) களிடமிருந்து இதைவிட வேறு என்ன எதிர்பார்க்கமுடியும்? ஆனாலும், இம்மாநாட்டிலிருந்து பொது மக்கள் ஒரு நல்லபடிப்பினையைத் தெரிந்து கொள்ள முடிந்தது என்பதற்காக மகிழ்ச்சியடைகிறோம். அதாவது பிறரை சுரண்டி வாழும் கூட்டம்—பார்ப்பனர்களும் பணக்காரர்களும் தங்கள் கொள்கையளவில் ஒன்றாகச் சேர்ந்துவிடுவார்கள் என்பதாகும். இன்னும் விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், பார்ப்பனர்கள் பிறர் உழைப்பில் வாழ்ந்தும் வாழவும் எண்ணி வருவது போல் பணக்காரர்களும் பிறர் உழைப்பில் வாழ்ந்தும் வாழவும் எண்ணியிருப்பவர்கள் என்பதை இம்மாநாட்டின் பேச்சுக்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இவர்கள் கூறும் ஆட்சேபணைகள் (1) விவசாய வருமான வரி என்பது ஒரே பொருளில் விதிக்கப்படும் இரட்டிப்பு வரியாகும்; (2) வரப்போகும் சர்க்கார் சீரமைப்பு வேலைகளை நடத்துவார்களென்ற நிச்சயமில்லாதிருக்கையில் பெருந் தொகையை சேமித்து வைப்பது சரியல்ல; (3) விளைபொருள்களின் விலை உயர்ந்திருக்கிறதென்பது உண்மையென்றாலும் விவசாயிகளின் இதர செலவினங்கள் அதிகப்பட்டிருப்பதினால் வரிகொடுப்பது கஷ்டமாகயிருக்கும்; (4) தேவையான பணத்திற்குமேல் வரி விதிப்பதென்பது பட்ஜட் முறைக்கே முரணானது என்பவைகளாகும்.

இவ்வாட்சேபணைகளைக் குறித்து ஆராய்வதற்குமுன், இவ்வரிவிதிப்பதினால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை பொது மக்கள் தெரிந்துகொண்டால்தான் இவ்வாட்சேபணைகளின் தன்மையை—மதிப்பை விளங்கிக்கொள்ள முடியும் என்றே கருதுகிறோம்.

"இப்பொழுது அமலிலுள்ள நிலவரி விதிப்பு முறையில் இரண்டு அநீதிகள் இருக்கின்றன. அவற்றைச் சரிப்படுத்துவது விவசாய வருமானவரி விதிப்பின் நோக்கம். அநீதிகள்:

1. பல்வேறு மகசூல்களிலிருந்து கிடைக்கும் வெவ்வேறு லாபங்களை, இப்போதைய தீர்வை முறை கணக்கிலெடுத்துக்கொள்வதில்லை. உதாரணம்; சோளம் பயிரிடும் விவசாயிக்கு ஒரு ஏக்கராவில் ரூ. 10 லாபம் கிடைக்கிறது. புகையிலை பயிரிடுகிறவனுக்கு ரூ. 400 லாபம் கிடைக்கிறது. ஆனால் இருவரும் ஒரேவிகித தீர்வைதான் செலுத்துகிறார்கள்.

2. ஏழையிடமிருந்து வசூலிக்கப்படும் விகிதாசாரத் தீர்வையே பணக்காரனிடமிருந்தும் இப்பொழுது வசூலிக்கப்படுகிறது. ஒரு ஏக்கரா நெல் சாகுபடி செய்பவன் ரூ. 10 தீர்வை செலுத்துகிறான். ஒரு ஆயிரம் ஏக்கருடையவன் ரூ. 1000 செலுத்துகிறான். நவீன வரி விதிப்பு கொள்கைகளுக்கு இது முற்றிலும் முரணானது"

என்று கவர்னரின் பிரதம ஆலோசகர் சர் சார்மன் ஸ்டிராத்தி விவசாய வருமானவரியை குறித்து விளக்குகையில் குறிப்பிட்டிருப்பதை எண்ணிப்பார்த்தால் இவ்விவசாய வருமானவரி விதிப்பு நேர்மையானதா அநீதியானதா என்பது விளங்கும்.

வேறு எல்லாவிதமான தொழில்களுக்கும் வருமானத்தின்மீது வரி விதிக்கையில் விவசாயத்தொழிலுக்குமட்டும் வருமானத்தின்மீது வரிவிதிப்பது எவ்வாறு தவறாகும் அநீதியாகும். வேண்டுமானால் இவ்வளவுகாலமாக விதிக்காதிருந்தது அநீதி என்று சொல்லலாமேயொழிய இப்பொழுது விதிப்பது அநீதி என்று சொல்லமுடியாது. ஏக்கராவுக்கு ரூ. 10 வருமானம் பெறுகிறவனும், ரூ. 400 வருமானம் பெறுகிறவனும் ஒரே விகிதாச்சாரம் அதாவது ஏக்கரா ஒன்றுக்கு இவ்வளவு என்று வரிசெலுத்துவது எவ்வாறு நீதியாகும்? இம்முறையை மாற்றியமைப்பது அநீதியா? இதற்கு ஆட்சேபணையா?

இன்னும் பாருங்கள்:

"இவ்வருமானவரித் திட்டங்கள் வெற்றிகரமாக அமல் நடக்குமாயின், இப்போதைய நிலவரி முறையையே அடியோடு நீக்கிவிடலாம். பரம ஏழைகளாயுள்ள விவசாயிகளுக்கு வரியே இல்லாமல் செய்வதும் சாத்தியமாகலாம்"

என்று சர் ஸ்டிராத்தி மேற்கொண்டும் விளக்கியிருப்பதை எண்ணிப்பார்த்தால், இவ்விவசாய வருமான வரியால் ஏழை மக்களுக்கு எவ்வளவு நன்மை என்பதும், இவ்வருமானத்தைக்கொண்டு பொது மக்களின் நன்மைக்கான கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசானம் முதலிய காரியங்கள் தாராளமாகச் செய்ய முடியும் என்பதும் விளங்கும். இதிலிருந்து அதாவது இவ்விவசாய வருமான வரி விதிப்பால் யாருக்கு நன்மை, யாருக்கு நஷ்டம் என்பதைப் பொது மக்கள் உணர்ந்து கொண்டால். இவ்வரிக்கு எழும்

ரோஜா முத்தையா

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

## 21-4-45ந் தேதி வரை 31129 அங்கத்தினர்கள் ரூ.3078—10—0 சந்தா

எப்ரல் மாதம் 21ம் தேதி வரை திராவிட கழகத்திற் (ஜஸ்டிஸ் கட்சிக்)கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து அங்கத்தினர் சேர்த்து தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டிருக்கும் அங்கத்தினர் ரசீதுகளின் எண்ணிக்கையும் அவைகளுக்காக வசூலான சந்தா தொகையும் கீழே குறிப்பிட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. கோவை | 5500 | 9. வட ஆற்காடு | 1578 |
| 2. தஞ்சை | 5268 | 10. மதுரை | 1432 |
| 3. சேலம் | 4460 | 11. செங்கல்பட்டு | 806 |
| 4. திருச்சி | 3886 | 12. திருவிதாங்கூர், (நாஞ்சினாடு) | 192 |
| 5. இராமநாதபுரம் | 2268 | 13 பெங்களூர் | 158 |
| 6. திருநெல்வேலி | 2089 | 14. புதுக்கோட்டை | 65 |
| 7. சென்னை | 1700 | | |
| 8. தென் ஆற்காடு | 1747 | | |

ஆகமொத்த அங்கத்தினர்கள் 31129. சந்தா ரூ. 3078-10-0

ஆட்சேபணைகள் எவ்வளவு சகஜம் என்பதையும் தெரிந்துகொள்ளலாம்.

அடுத்தபடியாக, இவ்வரியானது ரூ. 1500க்கு மேல் வருமானம் வரும் ஒருவருக்குத்தான் விதிக்கப்படும். அதுவும் ரூ. 1501 லிருந்து ரூ. 3500 வரை 9 தம்படி வீதமும் ரூ. 3501லிருந்து ரூ. 5000 வரை 1 அணா வீதமும், 5001லிருந்து 10000வரை 2-அணா வீதமும், மிச்சமுள்ள வருமானத்திற்கு 2½ அணா வீதமும் வரி விதிக்கப்படும் என்றுதான் கூறுகிறார்கள். வருமானவரி விதிப்பும் எல்லோருக்கும் ஒரே விகிதாச்சாரமுள்ளதல்ல. ரூ. 1500 வருமானம் வருகிறவர்கள் வருமானவரி செலுத்தவே வேண்டியதில்லை. ரூ 1501-க்கு மேல், ரூ 3500 வரை ரூபாய்க்கு 9 தம்படிதான் வரி கொடுக்கப் போகிறார்கள். அதற்கு மேல் வருமானம் உயர உயர அதற்குத் தகுந்தாற்போல் வரி விகிதமும் உயருகிறது. ஆகவே வருமானம் குறைவாக உடையவர்களுக்கு இவ்வரி ஒரு சிறிதும் பாதிப்பதில்லை. காங்கரஸ் மந்திரிகள் ஆட்சியில் ஏழை மக்களைப் பெரிதும் பாதிக்கும்படியான வரிகளை விதித்தது போல் இவ்வரியில்லையென்பதை பாமர மக்கள்-ஏழை மக்கள் உணரவேண்டும்.

உதாரணமாக புகையிலை வரி, விற்பனை வரி போன்றவைகள் ஏழை மக்களை எவ்வளவுதூரம் பாதித்தன, பாதித்தும் வருகின்றன. அப்படியிருந்தும் அவர்கள் ஆட்சேபணைகளை ஒரு சிறிதாவது லட்சியம் செய்தார்களா? வரி விதிக்கவில்லையா? அவ்வரிகளால் யார் கஷ்டப்படுகிறார்கள்? பணக்காரர்களைவிட ஏழைகள் தானே பெரிதும் கஷ்டப்படுகிறார்கள்? ஆனால், இவ்வரியால் ஏழைகளுக்குக் கஷ்டமில்லை; பணக்காரர்களுக்குத்தான் சிறிது கஷ்டம். அதுவும் 3000 பேர்களுக்கு. இதற்கு இவ்வளவு ஆட்சேபணைகளா என்பதை எண்ணிப்பாருங்கள்.

இனி தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் மகாநாட்டின் தலைவர்களின் ஆட்சேபணைகளைக் குறித்து சிறிது ஆராய்வோம். விவசாய வருமானவரி விதிப்பு இரட்டிப்பு வரியாகும் என்று கூறப்படும் ஆட்சேபணை சிறிதும் பொருத்தமற்றதாகும். ஏனெனில் நாட்டில் இன்று விதிக்கப்பட்டு வரும் வரி விதிப்பு முறைகள் இரட்டிப்பாகவே இருக்கின்றன. இதை நாம் ஏற்கனவே விளக்கியுள்ளோம். வீடு வைத்திருக்கிறவர்கள் வீட்டு வரியும், வருமானவரியும் செலுத்தவில்லையா? இது இரட்டிப்பு வரியாகவில்லையா? இதை யார் ஆட்சேபிக்கிறார்கள்? அதுபோல், நிலம் வைத்திருப்பவர்களும் நிலவரியும் வருமானவரியும் செலுத்துவதில் என்ன தவறு? அதிலும் இவ்வருமானத்திட்டங்கள் வெற்றிகரமாக அமல் நடக்குமாயின் ஏழை மக்களுக்கு நிலவரியே இல்லாது போய்விடும்.

இரண்டாவதாக, வரப்போகும் சர்க்கார் சீரமைப்பு வேலைகளைச் செய்வார்கள் என்ற நிச்சயமில்லாதிருக்கையில் பெருந்தொகையை சேமித்து வைப்பது சரியல்ல என்று கூறுவதும் பொருத்தமற்ற வாதமாகும். ஏனெனில், போருக்குப் பின் என்ன செய்வது என்று உலகிலுள்ள எல்லா நாடுகளும் திட்டங்கள் போட்டு வழி வகைகளை வகுத்துவருகையில், சென்னை மாகாணத்தில் மட்டும் வரப்போகும் சர்க்கார் சீரமைப்பு வேலைகளைக் குறித்து நிச்சயமில்லாதிருக்க முடியுமா? போருக்குப் பின் நாட்டில் எவ்வளவு சிக்கலான பிரச்சினைகள் எழும்? எவ்வளவு கொந்தளிப்புகள் எழும்? அவைகளை எவ்வாறு சமாளிப்பது என்று சிந்திக்காமல் இருக்கமுடியுமா? எந்த சர்க்கார் ஏற்பட்டாலும் எதிர்காலத்தில் இத்தகைய பிரச்சினைகளைச் சமாளித்துத்தான் தீரவேண்டும். அச்சமயத்தில் நிதிக்குத் தேவையேற்படுமே! முன்னதாகவே தேவையான நிதிக்கு ஏற்பாடு செய்யாதிருந்தால் அந்தச் சர்க்காரை புத்திசாலியான சர்க்கார் என்று யார்தான் சொல்லுவார்கள்?

மூன்றாவதாக, விளைபொருள்களின் விலை உயர்ந்திருந்தாலும் செலவினங்கள் உயர்ந்திருக்கிறதென்றும் ஆட்சேபணை கூறுகிறார்கள். செலவினங்கள் உயர்ந்திருக்கிறது என்று கூறுவதும் பொருத்தமற்றதாகும். அதுவும் விவசாய வருமானவரி விதிக்கப்படுவது சுமார் 3000பேர்களுக்குத்தான். ஆகவே இதனால் பெரும்பான்மையான மக்களுக்குப் பாதகமில்லையென்பது விளங்கும். இவர்களது ஆடம்பரச் செலவுகளில் ஒருசிறிது குறையுமேயல்லாது, இவர்களுக்கு இவ்வரி பெரிய பாரமாகவும் தோன்றாது.

கடைசியாக, தேவைக்குமேல்-

வரி விதிப்பது பட்ஜட்முறைக்கு முரணானது என்று சொல்லப்படுகிறது. இதுவும் நேர்மையற்ற வாதமென்றே கருதுகின்றோம். தேவை எவ்வாறு ஏற்படுகிறது? மக்களது நன்மைக்கான காரியங்கள் செய்ய எண்ணும் போது தேவை ஏற்படுகிறது. நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த, நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எண்ணும் போது அதற்கான திட்டங்களை வகுக்கும்போது தேவை ஏற்படுகிறது. அத்தேவையை சரிப்படுத்த வரி விதிப்பதைத் தவிர வேறு என்ன வழி? இது எங்ஙனம் பட்ஜட் முறைக்கு முரணாகும்?

எல்லாவற்றிற்கும் மேலாக, இப்போதிருக்கும் சர்க்கார் ஜனப்பிரதிநிதித்துவ சர்க்கார் அல்லவென்றும் இவர்கள் இவ்வரியை விதிக்கலாகாது என்றும் கூறப்படுகிறது. இது சிறிதும் பொருத்தமற்ற வாதமாகும். ஜனப்பிரதிநிதித்துவ சர்க்கார் என்று எதைக் குறிக்கிறார்கள்? இவர்கள் கூறும் ஜனப்பிரதிநிதித்துவ சர்க்காரை யார் ஒத்துக்கொள்கிறார்கள்? தங்களை ஜனப்பிரதிநிதித்துவ சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு தான்தோன்றித்தனமாக வரிகளைக் கண்ணைமூடிக் கொண்டு விதித்ததையும் நடந்து கொண்டதையும் யார் இதற்குள் மறந்துவிட்டார்கள்? ஆகவே 'ஜனப்பிரதிநிதித்துவ சர்க்கார் அல்ல' என்று சொல்லும் வாதமும் பொருத்தமற்றதாகும்.

சமீபத்தில் அல்லது போர் நின்றவுடன் 'ஜனநாயக' சர்க்காரோ, சகல கட்சி சர்க்காரோ ஏற்பட்டுத் தான் தீரும். ஒருவேளை காங்கரஸ்காரர்கள் கருதுகிறபடி போர் முடிவதற்குள்ளாகவே, ஏற்பட்டாலும் ஏற்படலாம். இவ்வருமான வரி அமலுக்கு வரப்போவது அடுத்த வருடத்திலிருந்து தான். வரப்போகும் சர்க்கார் தான் செலவு செய்யப் போகிறார்கள் என்பது உறுதி. எனவே, எதிர்காலத்தில் சர்க்காரை நிறுவப் போகும் எவரும் இவ்வரியை ஆட்சேபிக்கமாட்டார்கள் என்றே நம்புவதுடன், நாட்டின் எதிர்கால நன்மையைக் குறித்து கவலையுடையவர்கள் ஆதரிப்பார்கள் என்றே நம்புகின்றோம். மேலும், ஏழைகளிடம் வரிவசூலிப்பது பணக்காரர்கள் ஆட்சியாகும்; ஏழைகள் ஆட்சியென்றால் பணக்காரரிடம் வரி வசூலித்து ஏழைகளுக்கு நன்மை செய்ய வேண்டும். ஏழைகளின் சர்க்கார், பணக்காரர்கள் சர்க்காரா என்பதை யறிந்து கொள்ள இதுதான் தக்க 'மீட்டர்', இந்த அளவுகோலைக் கொண்டு சர்க்காரின் தன்மையை யுணர்ந்து பொதுமக்கள் தங்கள் ஆதரவை சர்க்காருக்குக் காட்டுவார்கள் என்று நம்புகின்றோம்.

ரோஜா முத்தையா

# வட ஆற்காடு மாவட்ட திராவிடர் கழகம்

## நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுத்தல்

22-4-45-ந் தேதி ஞாயிறு மாலை 4 மணிக்கு கச்சேரி தெரு எலிமெண்டரி பாடசாலைக் கட்டிடத்தில் நம் மாவட்ட நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கும் கூட்டம் ஒன்று நடைபெறும்.

அதுசமயம் நமது மாவட்ட இயக்க அன்பர்களும், திராவிடர் கழக அன்பர்களும் கட்டாயம் வரவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம் என தோழர்கள் வி. எஸ். வீரபத்திர முதலியார், முனிசிபல் சேர்மன், திருப்பத்தூர்; எம். ராசமாணிக்கம் திருப்பத்தூர்; ஜி. பழனிமுத்து வாணியம்பாடி; சி. கோவிந்தன் முனிசிபல் கௌன்சிலர் வாணியம்பாடி; குருமூர்த்தி ஆச்சாரி வாணியம்பாடி; எ. பெருமாள் ஆம்பூர்; திருநாவுக்கரசு வேலூர்; சுப்பிரமணியம் பேரளூர்; ஆ. மு. பாலகிருஷ்ணமுதலி திருவண்ணாமலை; வி. சோமசுந்தரம் ஆரணி; என். ஆர். கார்த்திகேயன் வந்தவாசி ஆகியவர்கள் தெரிவிக்கின்றனர்.

## கிராமப் பிரசாரம்

காஞ்சி, திராவிடர் கழகச் செயலாளர், தோழர் டி. பி எஸ். பொன்னப்பனார் செங்கற்பட்டு மாவட்டக் கிராமப் பிரசாரக் குழு ஒன்று யமைத்து, இத்திங்கள் இறுதி வாரத்திலிருந்து, கிராமப் பிரசாரம் புரியத் திட்டம் அமைத்திருக்கிறார்.

## திருத்தம்

சென்ற இதழ் தலையங்கத்தின் தலைப்பு 'ஜஸ்டிஸ்கட்சி ஏஜண்டுகள்'' என்றிருப்பதை "ராய்க்கட்சி ஏஜண்டுகள்" என்று தயவுசெய்து திருத்தி வாசித்துக்கொள்ளவும்.

—ஆசிரியர்.

# தென்னாடு கைத்தறி நெசவாளர் மாநாடு

சேலம், ஏப். 14-

12-4-45-ந் தேதி மாலை 7 மணிக்கு சேலம் செவ்வாய்பேட்டை தேவாங்கர் பாடசாலையில் தென்னாடு கைத்தறி நெசவாளர் மாநாட்டின் வரவேற்புக் கழக கூட்டம் நடைபெற்றது. தோழர் கெ. ஜெகதீச செட்டியார் தலைமை வகித்தார். தோழர்கள் ராஜாராமலிங்கம், தனபால், எஸ். வி. லிங்கம் இவர்கள் பேசினர். மாநாட்டை மே மாதத்தில் நடத்துவதென்றும், தோழர்கள் எஸ். ராமனாதன், டாக்டர் கிருஷ்ணசாமி, தங்கவேலு முதலியார், சி. என். அண்ணாதுரை இவர்களை தருவிப்பதென முடிவுசெய்யப்பட்டது.

## சீதக்காதி நினைவுநாள்

பொத்தனூரில் சீதக்காதிநினைவுநாள் 13-4-45ந்தேதி திராவிடர் கழகச்சார்பில் தோழர் மலை இரத்தினம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் ஆர். முத்து, க. சண்முகம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

## புலவர் பெரியசாமி

கரந்தைப் புலவர் கல்லூரித் தோழர் கோ. சி. பெரியசாமிப் புலவரவர்கள் உடல் நலங்குன்றியிருப்பதால் தயவு செய்து இன்னும் மூன்று மாதங்களுக்கு எந்தக் கூட்டத்திற்கும் அழைப்பு அனுப்ப வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறார்.

## ரத்தத்தடாகம்

ஓரியண்டல் தியேட்டரில் "ரத்தத் தடாகம்" 20-ந்தேதிக்கு மேல் 25-ந் தேதிக்குள் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடத்த தீவிர ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறது என ஆர்கனைசர் தோழர் சி. பி. சின்னராசு தெரிவிக்கிறார்.

## நூல்நிலைய ஆண்டு விழா

திருப்பூர் திராவிடர் கழக நூல்நிலைய இலவசப் படிப்பக ஆண்டு நிறைவு விழா மே மாதம் 5, 6 சனி, ஞாயிறுகளில் வைக்கப்பட்டிருக்கிறது. பெரியார் ஈ. வெ. ரா. அவர்களும் தோழர்கள் பண்டித பி. ஆர். மீனாட்சிசுந்தரனார் பி. ஏ., தில்லைப் புலவர் கா. மு. மாணிக்கம், பவானி வித்வான் அ. மு. குழந்தை, ஞா. தேவநேயன் பி. ஓ. எல். ஈரோடு எஸ். மீனாட்சிசுந்தரமுதலியார் பி. ஏ., எல். டி. ஆகிய அறிஞர்களும் மற்றும் பல அறிஞர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

எஸ். ஆர். சுப்ரமணியம், தலைவர்,
குரு இராமலிங்கம், செயலாளர்;

# புரட்சிக்கவி பாரதிதாசன் நிதி

### வேண்டுகோள்

தோழர்களான பெரியார் ஈ. வெ. ரா., சர் ஆர். கே. சண்முகம், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, மாஜி மந்திரி எஸ். இராமனாதன், மாஜிமந்திரி எஸ். முத்தையா முதலியார், சி. என். அண்ணாதுரை, என். அர்ச்சுனன், அ. இராமசாமி கவுண்டர், எஸ். எல். பாரதி, எஸ். ஆர். சுப்பிரமணியம், என். சங்கரன், வி. டி. ஆதிலட்சுமி அம்மாள், இந்திராணி பாலசுப்ரமணியம், ஏ. திருநாவுக்கரசு, எஸ். கிருஷ்ணராஜு ரெட்டியார், கே. கருப்பண்ணன், எம். செல்லப்பரெட்டியார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். வேதரத்னம் ஆகியோர் விடுக்கும் அறிக்கை:-

தமிழ்நாட்டின் ஒப்புயர்வற்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழர் சமூகத்திற்கும் பெரும் சேவை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய பெருந் தொண்டிற்கு நன்றி செலுத்தும் பான்மையோடு ஓர் நிதி திரட்டி கவிஞர் அவர்கட்கு கூடிய விரைவில் அளிப்பதெனத் தீர்மானித்துள்ளோம். இந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றினோமானால் கவிஞரின் சேவைக்கு நாம் ஓரளவு நன்றியும் பாராட்டும் செய்தவர்களாவோம். ஆதலால் தமிழ் அன்பர்கள் அனைவரும் இந்த நிதிக்கு தாராளமாக நன்கொடைகள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நிதிக்கு பணம் அனுப்பும் நண்பர்கள் "பாரதிதாசன் நிதிக்காக" என்று குறிப்பிட்டு கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோருகின்றோம்.

(1) என். கிருஷ்ணராஜு செட்டியார், நாமக்கல் P.O. சேலம் ஜில்லா.

## கவி முத்துத்தாண்டவர் விழா

ஏப்ரல் 28, 29, 30ந் தேதிகளில் திருச்சி உறையூரில் மதுரை ராவ்பகதூர் ரெங்காமிநாயுடு அவர்கள் தலைமையில் டை விழா நடைபெறும்.

ரோஜா முத்தையா

## ஈரோடு திராவிட மாணவர் கழக ஆரம்ப விழா

ஈரோடு திராவிட மாணவர் கழக ஆரம்ப விழா 16-4-45-ந் தேதி காலை 10 மணிக்கு ஈரோடு சரஸ்வதி ஹாலில் இவ்வூர் பிரபல வழக்கறிஞர் தோழர் ஈ. எம். அண்ணாமலை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. டை கழகத்தை தோழர் எம். சிக்கையநாயக்கர் அவர்கள் திறந்து வைத்தார். தோழர்கள் எம். ஆர். பெருமாள், பி. ஷண்முகவேலாயுதம், ஜி. என். ராஜு, மாணவர்கள் சுப்பையன், வஹாப், வாசுதேவன், ரங்கராஜு முதலியவர்கள் பேசினார்கள். தோழர் ஈ. வி. கே. செல்வம் நன்றிகூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

### மாலை பொதுக் கூட்டம்

திராவிடர் மாணவர் கழகத்தின் சார்பாக மாலை பொதுக்கூட்டம் சரஸ்வதி ஹாலில் கோவை மாவட்ட திராவிடர் கழக செயலாளர் எஸ். ஆர். சந்தானம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. பி. ஜனார்த்தனம் பி. ஏ., எஸ். தயமணிஇராஜன், ஈ. வெ. கி. சம்பத் ஏ. மைதீன் பாஷா, ஈ. வெ. கி. செல்வம், ஜி. என். ராஜு, பி. ஷண்முகவேலாயுதம் முதலியவர்களும், மாணவர் தோழர் எம். மாணிக்கமும் சொற்பொழிவாற்றிய பின் தலைவர் தமது முடிவுரையில் மாணவரை அரசியலுக்கு அழைத்து அவர்கள் வாழ்க்கையைக் கெடுக்கப் பார்க்கின்றனர் என்ற கூற்றுக்குத் தக்க சாட்டையடி கொடுத்தார். கோவிந்தராஜன் நன்றி கூற கூட்டம் முடிந்தது.

## ஈரோட்டில் வழியனுப்பு

ஈரோட்டிற்கு திராவிட மாணவர் கழக திறப்பு விழா வாற்றவந்த தோழர் ஏ. பி. ஜனார்த்தனம் அவர்களை வழியனுப்ப ஈரோடு மாணவர்கள் 17-ந் தேதி இரவு ரயிலடிக்குச் சென்றார்கள். ஜனார்த்தனம் செல்லவேண்டிய அதே வண்டியில் சர் ஆர். கே. சண்முகம் அவர்கள் முதல் வகுப்பில் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். அவர் உருவத்தை நம் மாணவர்கள் கண்டதும் அவருக்கு சென்னை செல்லும் வரையிலாவது சிந்தனைக்கு வேலை கொடுக்க வேண்டுமென முடிவுசெய்து வண்டி புறப்படுவரையில் ஆத்திரமாகவும், உணர்ச்சியாகவும் ஆனால் பெருந்தன்மையான முறையில், "திராவிடநாடு திராவிடருக்கே" "பெரியார் வாழ்க" "ஜனார்த்தனம் வாழ்க", "திராவிட இனத் துரோகிகள் ஒழிக" என்று இட்ட கோஷங்கள் பிளாட்பாரத்தையே அதிரச்செய்தது. சர். சண்முகத்தையும் கலங்கச் செய்தது என்பது அவரது ஏக்கம் நிறைந்த பரிதாபம் மிகுந்த பார்வையிலிருந்து வெளியாயிற்று.

## தொடங்கிவிட்டது

ஈரோட்டில் 6-4-45-ல் பயிற்சி மாணவர்கள் சுற்றுப் பிரயாணம் தஞ்சை மாவட்டத்தில் சிறப்பாகத் தொடங்கிவிட்டது. 10-4-45-ல் இருந்து தோழர்கள் சுற்றி வருகிறார்கள்.

ஈரோட்டில் பயிற்சி முகாம் 4-5-45 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும். குறைந்தது மூன்று நாட்கள் பயிற்சியளிக்கப்படும். சுற்றுப்பிரயாணப் பிரசாரத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் பயிற்சி முகாமுக்கு வந்து சேரக் கேட்டுக்கொள்கிறோம்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி, தளபதி சி. என். அண்ணாதுரை எம். ஏ., வழக்கறிஞர் டி. பி. வேதாசலம், ஏ. பி. சனார்த்தனர், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பயிற்சி தருவார்கள்.

மாவட்டத் தலைவர்கள் மாணவர் கூட்டங்கள் மாவட்டந்தோறும் 9-5-45 புதன்கிழமையிலிருந்து ஏற்பாடுகள் செய்து எழுதக் கேட்டுக்கொள்கிறோம். குறிப்பாக சென்ற முறைகளில் சரியாகச் சுற்றுப் பிரயாணம் நடவாத சென்னை, வடஆற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை, கோவை முதலிய இடங்களிலுள்ள தோழர்கள் பயிற்சி பெற்று வரும் மாணவர்களைக்கொண்டு பட்டி தொட்டிகளில் கூட்டங்கள் நடத்தி பயன்பெறும்படியாய் கேட்டுக்கொள்கிறோம். செயலாளர்.

## திருச்சிஜில்லா திராவிடர் 16-வது (ஜஸ்டிஸ்) மகாநாடு

13-5-45ந் தேதி பொன்மலையில் நடைபெறும். மற்ற நிகழ்ச்சிகள் பின்னால் அறிவிக்கப்படும். டைமாநாட்டின் வரவேற்புக்கமிட்டிக் கூட்டம் 22-4-45ந் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 7-மணிக்கு திருச்சி டவுன் ஸ்டேஷனுக்கருகில் உள்ள கருணாநிதி பார்க்கில் நடைபெறும். இயக்கத்தோழர்கள் தவறாது கூட்டத்திற்குவரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்

தி. பொ. வேதாசலம்,
செயலாளர்.

எனது சகோதரர் கோ. சோமசுந்தரம் இன்புளுயன்சா சுர நோயால் சென்ற 10-4-45 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இயற்கை எய்தினர். தற்காக நேரில் வந்தும், தந்திகள், கடிதங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த உறவினர், நண்பர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஜி. சண்முகம் புரோப்ரைட்டர்,
மேனகா சுதேசி ஸ்லேட் பாக்டரி,
கும்பகோணம்.

# சென்னை திராவிடர் கழகம்

## நிறைவேறிய தீர்மானங்கள்

ஏப்ரல் 1-ஆம் தேதி நடைபெற்ற 14 வது சென்னை ஜில்லா திராவிடர் (ஜஸ்டிஸ்) கழக மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:-

தோழர்கள் சி. டி. நாயகம், வள்ளியம்மாள், ஆரோக்கியசாமி, டி. எஸ். பிள்ளை ஆகியவர்கள் மறைந்தமைக்கு வருந்துவதாக அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

சேலம் மாநாட்டுத் தீர்மானத்தை ஆதரித்தும், மாகாண மாநாட்டை விரைவில் கூட்டவேண்டுமென கேட்டுக் கொள்வதாகவும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருச்சி தக்கர் பாபா ஹாஸ்டல் நிர்வாகஸ்தர் ஆதிதிராவிட மாணவர்களுக்குச் செய்த அநீதியைக் கண்டித்தும், டாக்டர் அம்பேத்கார் ஹாஸ்டல் உதவி நிதிக்கு தாராளமாக உதவி செய்யும்படி கேட்டுக்கொள்வதாகவும் வேண்டிக்கொள்ளப்பட்டது.

சான்பிரான்ஸிஸ்கோ மாநாட்டின் இந்தியப் பிரதிநிதிக்கு எதிராக செய்யப்படும் கிளர்ச்சி ஒருசில பார்ப்பனர்கள் பொறாமையின் காரணமாக செய்யப்படுவதாகும் என்றும் அதைக் கண்டிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்துசட்ட சீர்திருத்தச் சட்டத்தை சில திருத்தங்களோடு ஆதரிப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

அறிவை மழுப்பச்செய்து சாதியுணர்ச்சியை வளர்க்கும் சாதியைப்பற்றிய மதத்தைப்பற்றிய பகுதிகள் பாடபுத்தகங்களிலிருந்து நீக்கவேண்டுமென்றும், ஆரம்பப்படிப்பை கட்டாயப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கமிஷனரின் ஏழை நிதிக்கு பொது மக்கள் தாராளமாக உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

பிறகு, மண்ணெண்ணெய் முதலியவைகளின் 'ரேஷன்' கஷ்டமில்லாமல் யாவருக்கும் கிடைக்குமாறு செய்ய கேட்டுக்கொள்வதாகவும், இனி பார்ப்பனரல்லாதாரையே அட்வகேட் ஜெனரலாக நியமனம் செய்யுமாறு கேட்டுக் கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

விவசாய வருமானவரியை ஆதரித்து பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவந்து அதை விளக்கிப் பேசினார். தோழர் க. அன்பழகன் ஆதரித்தார்.

தோழர்கள் ஜெ. எஸ். கண்ணப்பரும், டி. சண்முகம் பிள்ளையும் அத்தீர்மானத்தை எதிர்த்தார்கள்.

இத் தீர்மானத்தைப் பற்றி அடுத்த மாகாண மாநாட்டில் யோசிக்கலாம் என்று தோழர் வி. பத்மநாபன் ஒரு திருத்தத் தீர்மானம் கொண்டு வந்தார். தோழர் டி. ஏ. எஸ். சாமி ஆதரித்தார். திருத்தத் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு தோற்றுவிட்டது. அசல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மாகாண பார்ப்பனரல்லாதார் வக்கீல் சங்கம்

## நிர்வாகக்கமிட்டிக்கூட்டம்

17-4-45ந் தேதி கூடிய சென்னை மாகாண பார்ப்பனரல்லாத வக்கீல் சங்க நிர்வாகக் கமிட்டிக்கூட்டத்தில், சட்டக் கல்லூரியில் 97சதவிகித ஸ்தானங்களையும் நீதிஸ்தலங்களில் உள்ள ஸ்தானங்களில் 97சத விகிதத்தையும் பார்ப்பனரல்லாதாருக்கு ஒதுக்கிவைக்க வேண்டுமென (ஜெனரல்பாடி) மகாசபைக்கூட்டத்திற்கு சிபார்சு செய்யப்பட்டது, மேலும் ஷை மகாசபையை 29-4-45-ந் தேதி பிற்பகல் 4 மணிக்கு பிராட்வே 5/9 கட்டிடத்தில் கூட்டி நிர்வாகஸ்தர்களைத் தெரிந்தெடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது. அட்வகேட் ஜெனரலாக பார்ப்பனரல்லாத அட்வகேட்டுகளை நியமனம் செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்வதென்றும், பார்ப்பனர்களே அட்வகேட் ஜெனரல் ஏகபோகமாகவிருந்து வருவதைக் கண்டிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

# சேலம் கைத்தறி மாநாடு

25-4-45-ஆந் தேதி சேலம் அரிசிப் பாளையம் கைத்தறி நெசவாளர் சங்கத்தில், தென்னாடு கைத்தறி மாநாட்டின் வரவேற்புக் கழகக் கூட்டம் நடைபெறும். அனைவரும் வருக.

அரூர் பாடசாலையின் முதலாண்டு விழா ஜில்லாபோர்டு தலைவர் கே. ஆர். நாச்சியப்பகவுண்டர் தலைமையில் 13-4-45ந் தேதி நடந்தது.

# விளம்பரம்

குடி அரசு பத்திரிகையின் 10-3-45உ வெளியீட்டில் 2-ம் பக்கம் 3-பத்தியில் வெளியிடப்பட்ட திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிடர் லீக் (இலங்கை) குறிப்பிட்டிருக்கும் கச்சேரியின் வரவு செலவு கணக்கு விஷயமாய் ஷை கச்சேரி நடத்தி முடித்த ஸ்பெஷல்கமிட்டியார் 22-3-45ல் திரு பி. எஸ். எம். கொம்பையா அவர்களின் தலைமையின்கீழ் கூடி ஆலோசித்து தீர்மானித்துக்கொடுக்கும் பதில்.

1. 6-8-44ல் திரு. என். ஆர். முத்தையா அவர்களின் தலைமையின்கீழ் கொழும்பு பௌத்தமத மண்டபத்தில் நடந்த ஷை லீக் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டு ஒப்புக் கொண்ட ஆஸ்பத்திரி பண்டு, டிரஸ்டு கமிட்டியை தலைமை அலட்சியம் செய்ததினாலும்,

2. கச்சேரியின் ஸ்பெஷல் கமிட்டியாரிடம் டிக்கட் விற்பனைசெய்தவர்கள் விற்பனைத் தொகைகளை ஒப்படையாததாலும்,

3. திருநெல்வேலி ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் தொண்டர் படை சேனாதிபதி திருவாளர் நல்லையா அவர்களிடமிருக்கும் டிக்கட் விற்பனைத் தொகை ரூ. 72 இன்னும் அவர்கள் செலுத்தாததினாலும்,

4. திரு. டி. எஸ். பீட்டர் தம்பிடமுள்ள டிக்கட்விற்பனைப் பணத்தை கச்சேரியின் ஸ்பெஷல் கமிட்டியாரிடம் ஒப்புவிக்காமல் தாய்நாடு சென்றதாலும் அன்னாரின் ஒத்துழையாமையினாலும் இன்னும் ஷை கணக்குகள் முடிவு கட்டப்படவில்லை.

ஆகையால் டிக்கட் விற்பனை செய்தவர்கள் ஷை விற்பனைத் தொகைகளை ஸ்பெஷல் கமிட்டியின் பொக்கிஷதாராகிய திரு என். வ. செல்லையா அவர்களிடம் 10-5-45க்குள் செலுத்தும்படியாக அன்புடனும் தயவுடனும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஸ்பெஷல் கமிட்டியார்:-

1. என். வ. செல்லையா,
2. அருள்மாணிக்கம்,
3. என். டேவிட் ஜோசப்,
4. ஜி. நல்லமுத்து.

எங்கள் புது வருஷ நற்செய்தியும் நல்வரவும்

மேனகா சிகரெட்டுகள் கைதேர்ந்த திராவிடத் தொழிலாளர்களால் செய்யப்பட்டவை. உறுதியிலும் உபயோகத்திலும் மேனாட்டு சிகரெட்டுகளை தோற்கடிப்பவை.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்

மேனகா சுதேசி சிகரெட் பாக்டரி,
Prop. G. சண்முகம்,
பெரிய கடைத்தெரு, கும்பகோணம்.

# திராவிட நாட்டுச் செய்திகள்

திண்டுக்கல் நமதியக்கப்பத்திரிகை விற்பனையாளர் தோழர் சி. பா. சந்திரன் அவர்களின் வாழ்க்கைத் துணைவி தோழர் ஞானசிரோன்மணிக்கு 12-3-45ந் தேதி பிறந்த ஆண் குழந்தைக்கு 'பாண்டியன்' என்றும், நமது இயக்கத் தோழர் எஸ். மாரியப்பன் அவர்கள் வாழ்க்கைத் துணைவி தோழர் மாமாயம்மாளுக்கு 20-1-45-ல் பிறந்த ஆண் குழந்தைக்கு 'பொன்னப்பன்' என்றும் பெயர் வைத்து இதன் நினைவாக நமது இயக்கப் பத்திரிகைகளுக்கு ரூ. 1 வீதம் நன்கொடையளிக்கப்பட்டது.

* *

செயங்கொண்ட தாலுகா மேலணிக்குழி மளிகை தோழர் மே. ரத்தின முதலியார் துணைவி தோழர் வள்ளியம்மைக்கு 20-1-45-ந் தேதி பெண் மகவு பிறந்ததின் நினைவாக 'குடிஅரசு'க்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* *

காமகிரிப்பேட்டை போர்டு உயர்தர ஆரம்பப்பாடசாலை மாணவர் கழகத்தின் ஆண்டுவிழா ஷையூர் பாடசாலைக் கட்டிடத்தில் ஜனாப் சுபான் சாஹூம் (சப்ரிஜிஸ்தார்) அவர்கள் தலைமையில் 6-4-45-ந் தேதி நடைபெற்றது. பல தோழர்களின் சொற்பொழிவுக்குப் பின் வந்திருந்த ஆசிரியைகள் உட்பட அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

* *

தமிழ் நாடு அருந்ததியார் சமூக ஊழியர் சங்கத் (கிளை நிலையம், 151/21 ஜிந்து பிட்டி தெரு, கொழும்பு) தின் காரியக் கமிட்டிக் கூட்டம் 7-4-45-ஆந் தேதி முகத்துவாரம் 737/38 எண்ணுள்ள இல்லத்தில் சங்கத் தலைவர் தோழர் கு. ஆ. லாசாஸ் தலைமையில் கூடிற்று. பல விஷயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

* *

கரூர் தாலுகா தோட்டக்குறிச்சி தேவேந்திர வாலிபர் சங்கப் பொதுக் கூட்டம் மோகனூர் தோழர் எம். பி. கந்தசாமி தலைமையில் 10-4-45-ந் தேதி நடைபெற்றது. தீண்டாமையைக் குறித்தும், கல்வி, சுகாதாரம், சமுதாய சங்கத்தின் நோக்கம் என்பது பற்றியும் பல தோழர்கள் பேசினார்கள். விவசாய இலாகாவில் ஷெ சமூக மக்களுக்கு வேலைகள் அளிக்குமாறு ஷெ இலாகா டைரக்டர் அவர்களை கேட்டுக் கொள்வதாகவும், தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்காத ஹோட்டல்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் லைசன்ஸ் கொடுக்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* *

சிப்ளாப்புத்தூர் தமிழர் சங்கத்தின் பொதுக்கூட்டம் 12-4-45ந்தேதி தோழர் க. சந்தனமுத்து ராஜா தலைமையில் நடைபெற்றது. பல தோழர்கள் நமது யுத்தமும் கடமையும் என்பது பற்றியும், விவசாய அபிவிருத்தி முதலிய பொருள்கள் பற்றியும் பேசினார்கள்.

* *

சேலம், குகை, மாரியம்மன்கோவில் தெருவிலுள்ள திருக்குறள் கழகத்தினரால் "திருக்குறள் விரிவுரை" வகுப்பு 13-3-45ல் தோழர் அ. இராமசாமிக் கவுண்டர் எம். ஏ. எல். டி., அவர்கள் தலைமையில் துவக்கப்பட்டு, ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்று வருகிறது.

* *

பம்பாய் தென்னிந்திய ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் 5வது ஆண்டின் ஜெனரல்பாடி கூட்டம் சங்கத்தின் தலைவர் தோழர் எம். வி. துரைசாமி அவர்கள் தலைமையில் நடந்தேறியது. பின் தோழர் எம். வி. துரைசாமி அவர்களை தலைவராகக்கொண்ட நிர்வாகக் கமிட்டித் தெரிந்தெடுக்கப்பட்டது.

* *

சென்னை ஜில்லா தாழ்த்தப்பட்டார் பெடரேஷன் சார்பிலும், சென்னை தாழ்த்தப்பட்டார் நலஉரிமைச் சங்கத்தின் சார்பிலும் டாக்டர் அம்பேத்கார் நாள் 14-4-45-ல் தோழர் ஏ. வரதராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

* *

9-4-45 சேலம் தாலுகா பனமரத்துப்பட்டி ஆதிதிராவிட வாலிபர் சங்க ஸ்தாபனம் தோழர் எம். கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எம். எஸ். ராஜமாணிக்கம், ஏ. கணபதி, சே. பெருமாள், பி. ரங்கசாமி, சே. ராமலிங்கம், எம். பழனி முதலியோர் பேசினார்கள்.

* *

பெண்ணாகடத்தில் 13-4-45-ல் தமிழ் புத்தாண்டு விழா தோழர் ராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. வடிவேல், முருகேசன், சிவராமசேது, பழமலை, முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

13-4-45-ந் தேதி இரவு கோவையில் தோழர் பி. முருகேசன் அவர்கள் தலைமையில் ஷெட்யூல்டு வகுப்பாரின் தனிப் பெருந் தலைவரான டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 52-வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. சங்கக் கட்டிடத்தில் டாக்டர் அம்பேத்கார் வாசகசாலை ஒன்றும் தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தோழர்கள் எஸ். காசிம் சாயபு, என். ஏகாம்பரம், கெ. கிருஷ்ணசாமி, ஆர். கணபதி, ஜே. அந்தோனிகுருஸ் ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள்.

* *

திருச்சி 14-4-45 திருச்சி ஜில்லா ஷெடியூல்டு வகுப்பின் நன்மைக் கழகம் 14-4-45 மாலை 6 மணிக்கு திருச்சி நகர மண்டபத்தில் தோழர் தி. பொ. வேதாச்சலம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாயிற்று.

* *

பெரம்பலூர் தாலுகாவைச் சேர்ந்த திருமாந்துறை கிராமத்தில் 12-4-45-ந் தேதி மாலை தோழர் இ. அங்கமுத்து அவர்களின் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்தைக் குறித்து திருச்சி கல்லூரி மாணவர் சி. பி. தங்கராஜ் என்பவரும் ஆசிரியத் தோழர் ஜே. துரைராஜ் என்பவரும் பேசினார்கள்.

* *

திருச்சிதாலுக்கா, நடராஜபுரம் ஷெடியூல்ட் வகுப்புக்கழகத் தொடக்க விழா தோழர் என். பி. மாணிக்கம் அவர்கள் தலைமையில் 12-4-45ல் நடைபெற்றது. தோழர்கள் வ. வீராச்சாமி, ஜி. வீராச்சாமி, தமிழ்த்தோழன் அ. காசிநாதன் முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

* *

எம்பிகாபுரம் அண்ணாதுரை பகுத்தறிவுக் கழகத்தின் சிறப்புக் கூட்டம் 8-4-45 இரவு 8 மணிக்கு தோழர் எம். எஸ். மாசானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எஸ். எஸ். ஐயப்பா, ஏ. சாமி, பி. மூக்கையா, பி. அருணாசலம் ஆகியோர் கழக முன்னேற்றத்தைப் பற்றிப் பேசினார்கள்.

தோழர்கள் எஸ். எஸ். ஐயப்பா, எஸ். முத்தையா இவர்களது குமாரர்கள் முறையே சங்கரன், சந்தனராஜ் மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

கழக முன்னேற்றத்திற்காக பம்பாயில் வசூலித்த ரூ. 50 கழக செயலாளரிடம் தோழர் மாசானம் அவர்கள் கொடுத்தார்.

* *

ஈரோடு மருத்துவர் சங்க அமாவாசை மாதாந்திரக்கூட்டம் எம். ராமசாமி மருத்துவர் தலைமையில் 12-4-45ந் தேதி கூடிற்று. கோவை ஜில்லா மருத்துவர் முதலாவது மகாநாட்டுக்கு ஈரோடு மருத்துவர் சங்கத்தின் சார்பாக பல தீர்மானங்கள் அனுப்பவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

## வடசென்னை மத்திய திராவிடர் கழக நிர்வாகக் கூட்டம்

24-4-45-ந் தேதி ஷை கழகக் கட்டிடத்தில் கூட்டம் கூடிபல விஷயங்களை செயல் முறைக்குக் கொண்டுவர திட்டம் வகுக்கப் போவதால் எல்லா அங்கத்தினர்களும் இதையே அழைப்பாகக் கொண்டுவருமாறு வேண்டிக் கொள்ளுகிறேன்.

எம். கே. டி. சுப்பிரமணியன்,
காரியதரிசி.

## தென் மண்டல திராவிட மாணவர் மாநாடு

வரவேற்புக் கழக உறுப்பினர் கூட்டம் 10-4-45-ந் தேதி திருவாரூரில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் மேற்படி மாநாட்டுக்குத் தலைவராக மதுரை கல்லூரித் தோழர் ஆர். சத்தியேந்திரன் அவர்களையும், கொடியேற்றுபவராக குடந்தைக் கல்லூரித் தோழர் ஆர். சொக்கப்பாவையும், திறப்பாளராக அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தோழர் க. மதியழகன் அவர்களையும், மற்றும் பெரியார் ஈ. வெ. ரா., தளபதி சி. என். அண்ணாதுரை, ஏ. பி. சனார்த்தனம், ஈ. வெ. கி. சம்பத், ஏ. இராமசாமிக் கவுண்டர், என். தவமணிஇராசன், இளம்வழுதி, வீரமணி ஆகியோரையும் அழைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

## சென்னை ஆதிதிராவிடர் இளைஞர் கழகம்

ஷை கழகத்தின் ஆதரவில் 15-4-45-ந் தேதி சாகிப் பகதூர் மீரா சாகிப் மரக்காயர், தோழர் என். ஷண்முகம்பிள்ளை ஆகியவர்கள் முன்னிலையில் "திராவிட வீரன்" என்னும் சீர்திருத்த நாடகம் நடத்தப்பட்டது. தம்மக்களிக்கப்பட்ட வரவேற்புப் பத்திரத்திற்கு பதிலளிக்கையில், ஷை கழகக் கட்டிடத்தை தாமாவது அல்லது தாமும் தோழர் எஸ். ஷண்முகம் பிள்ளையும் சேர்ந்தாவது பூர்த்தி செய்து தருவதாகக் கூறினார்.

## திருமணம்

அந்தனூர்பேட்டையில் தோழர்கள் டி. வி. சிங்காரவேலுக்கும், ராஜேஸ்வரிக்கும், 11-4-45-ந் தேதி தோழர் டி. நமசிவாயம் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் அ. கோபாலன், ராமதாஸ் முதலியவர்கள் சீர்திருத்த மணத்தின் அவசியம் பற்றிப் பேசினார்கள். மணமகனால் 'குடிஅரசு', 'திராவிடநாடு' ஆகியவைகளுக்கு முறையே ரூ. 1 அளிக்கப்பட்டது.

## தஞ்சைமாவட்ட தமிழ் இசை மாநாடு

தஞ்சை ஜில்லா தமிழ் இசை மாநாடு ஐயம்பேட்டையில் மே மாதம் இரண்டாவது வாரத்தில் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஷை மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவர் இராவ்பகதூர் ஏ. ஒய். அருளானந்தசாமி நாடார்; மாநாட்டுத் தலைவர் வடபாதிமங்கலம் இராவ்பகதூர் வி. எஸ். தியாகராஜ முதலியார் எம். ஏ.; மாநாட்டுத் திறப்பாளர் தோழர் டபுள்யு. பி. ஏ. சௌந்திரபாண்டியன்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் நெசவாளர் சங்கம்

27-3-45-ல் இரவு 8 மணிக்கு கீழ்ச் சிவந்திப்பட்டி வீதியில் நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் தோழர் எம். கோவிந்தன் பி. ஏ., தலைமையில் நடைபெற்றது. அத்வமயம் ராமநாதபுரம் ஜில்லா நூல் கண்ட்ரோல் ஆபீஸர் அவர்கள் நூல் பஞ்சத்தின் காரணம் பற்றியும், சி. முத்துசாமி தறிக்காரர்களின் கடமை பற்றியும் அவைத் தலைவர் அவர்கள் தொழிலாளர்கள் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் கடைபிடிக்க வேண்டியும் இந்த ஊருக்குக் கிடைக்கும் நூல் கோட்டாவை இந்த ஊரிலே சப்ளை செய்யும்படி நூல் கண்ட்ரோல் ஆபீசரை வேண்டியும் பேசினார்.

## நீத்தார் கடன் பொதுக்கூட்டம்

சென்னை இராயபுரம் திராவிடர் கழக உறுப்பினர் தோழர் டி. சண்முகம் மகன் கார்த்திகேயன் உயிர் நீத்ததை முன்னிட்டு 8-4-45 காலை 10 மணிக்கு இராயபுரம் பி. வி. கோபால் தெருவிலுள்ள அவரது இல்லத்தில் ஆசிரியர் மயிலைசிவமுத்து அவர்கள் தலைமையில் நீத்தார் கடன் என்பது பற்றி, தோழர்கள் கே. குப்புசாமி, என். வி. நடராசன், என். ஜீவரத்தினம், ஜெயசந்திரன் ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர். தோழர் சண்முகம் யாவருக்கும் வணக்கங் கூறிய பின் நினைவு கடன் இனிது முடிவுற்றது.

### மற்றொரு கூட்டம்

இராயபுரம் பனைமரத் தொட்டியில் வசிக்கும் திராவிட இயக்கத் தோழர் இராஜு அவர்களின் குழந்தை இயற்கையெய்தியதை முன்னிட்டு 8-4-45-ந் தேதி பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நீத்தார் கடன் என்பது பற்றித் தோழர்கள் கே. குப்புசாமி, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன் சொற்பொழிவாற்றிய பின் வணக்கங்கூறலுடன் இனிது முடிவுற்றது.


## தேவை

"குடி அரசு" வாரப் பத்திரிகை விற்பனை செய்ய டிபாசிட்டு கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

1. திருப்பூர்
2. உடுமல்பேட்டை
3. விருதுநகர்
4. திருநெல்வேலி
5. கிருஷ்ணகிரி

மானேஜர்.

## விற்பனைக்கு

தர்மதீர சுவாமிகளால் எழுதப்பட்ட பகவத் கீதை ஆராய்ச்சி என்னும் நூல் நம்மிடம் விற்பனைக்குக் கிடைக்கும். கிரௌன் 1/8 சைஸ், 154 பக்கங்கள் கொண்ட, கீதையின் முரண்பாட்டை அணியுற விளக்கிக்காட்டும் சிறந்த நூல் ஒன்றின் விலை அணா 8. தனிப்பிரதி வேண்டுவோர் புக்போஸ்ட்டில் அனுப்ப பிரத்யேகமாக 0-1-3 அணா ஸ்டாம்பும், ரிஜிஸ்தர் புக்போஸ்ட்டில் அனுப்ப 0-4-3 ஸ்டாம்பும் அனுப்பவும்,

கிடைக்குமிடம்,
'குடி அரசு' பதிப்பகம்,
ஈரோடு.

## "குடி அரசு" பதிப்பக வெளியீடுகள்

### 4 அணா புத்தகங்கள்

இராமாயண ஆராய்ச்சி
„ பால காண்டம்
„ ஆரண்ய காண்டம்
„ கிட்கிந்தா காண்டம்
பகுத்தறிவு அல்லது மரண சாஸனம் முதல் பாகம்
ஷை இரண்டாம் பாகம்
மதப்புரட்சி
வால்டையரின் வாழ்க்கைச் சரிதம்
பரிணாமவாதம்
இந்தியமாதா
பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை
இங்கர்சால் பொன்மொழிகள்
ஜாதியை ஒழிக்கவழி (டாக்டர் அம்பத்கார் எழுதியது)
சோதிட ஆராய்ச்சி (ஈ. வெ. ரா.)
பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)
கடவுளும், பிரபஞ்சமும்

கிடைக்குமிடம்:—
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42 Cutchery street, Erode.